R4854

PROVIDING FOR ONE'S NATURAL HOUSEHOLD
ஒருவனுடைய சொந்த குடும்பத்தை விசாரித்தல்

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாக தன் வீட்டாரையும் விசாரியமற்போனால்,
அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான். ." 1 தீமோத்தேயு 5:8

இந்த வசனத்திற்கு கீழ்க்கண்டவாறு பொருள் கூறலாம். தன்னை சார்ந்திருக்கிறவர்களை, விசேஷமாக தன் சொந்த வீட்டாரை கவனிக்காதவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியை விட மோசமானவனுமாய் இருப்பான்.

இது ஒரு கிறிஸ்துவ புருஷன் தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கவனிக்க வேண்டிய கடமையைப் பற்றிக் கூறுகிறது. கணவன் மனைவிக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்யவில்லை என்றால். அவளை நேசிக்கவில்லை என்றால், இருதயத்திலோ அல்லது அன்பிலோ கைவிட்டுவிட்டான் அல்லது உண்மையிலேயே அவன் கர்த்தரிடமிருந்து, ஆவியின் வழிநடத்துதலிலிருந்து, "முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும் இணக்கமும் உள்ளதாயும் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும் இருக்கிற பரலோகத்திலிருந்து வருகிற ஞானத்திலிருந்தும்" பிரிந்து விட்டான் என்பதை குறிக்கிறது.

இந்த சூழ்நிலைகளில் இப்படிப்பட்டவர்களை "ஜெயங்கொண்டவர்கள்" என்று கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் என்று, அவர்கள் சீர்திருந்துகிறவரை நினைக்கக்கூடாது. மேலும் ஒவ்வொரு பெற்றோரும் அபூரண, சாகக்கூடிய சரீரத்தையும் உடைய குழந்தையை இந்த உலகத்திற்கு கொடுப்பதோடு அவன் வாழ்க்கையை ஆரம்பிக்கூடிய அனைத்தையும் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார்கள். குழந்தைகளை உலகத்திற்குள் கொண்டு வந்த பிறகு, அவர்களை இந்த உலகில் சரியானபடி நிலைநாட்டுவது பெற்றோர்களது கடமையாயிருக்கிறது. இதில் குழந்தை மற்றும் வாலிப பருவத்தில் தேவையான உணவு மற்றும் ஆடை மட்டுமல்ல, அறிவுப்பூர்வமான மற்றும் நீதி நெறிமுறைகளைப் பற்றிய அறிவுரைகளும் அடங்கும். இதை குறித்து நாம் அநேகம் தடவை குறிப்பிட்டிருக்கிறோம். இவை எல்லாம் குழந்தைகளுக்கான அனைத்தையும் குறிப்பிடுகிறது.

வாழ்க்கையின் நிச்சயமின்மையை பார்க்கும் போது குழந்தைகள் தகுந்த பருவத்தை அடையும் முன்பே ஒருவேளை பெற்றோர் மரித்துப் போகக்கூடிய நிலையில் பெற்றோர்கள், பிள்ளைகளுக்கானதை சேர்த்து வைப்பது அவசியம் என்று வேதாகமம் கூறுவது நியாயமற்றதாக இருக்க முடியாது. பெற்றோர்கள் அதிக செல்வத்தை பிள்ளைகளுக்காக சேர்த்து வைத்து, அது குறித்து அவர்கள் சண்டையிட்டுக் கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார் என்று நாங்கள் நினைக்கவில்லை. குழந்தை நல்லபடியாக பிறந்து தேவையான கல்வியையும் பருவத்திற்குரிய வழிமுறைகளையும் பெற்றால் அவன் நல்லவிதமாக இருக்கிறான். நல்ல பரம்பரை சொத்தை பெற்றிருக்கிறான். தங்கள் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட ஏற்பாடுகளை செய்ய பெற்றோர் பலமும் தெளிந்த புத்தியுள்ள ஆவியினால் வழிநடத்தப்படுகிறார்கள். கர்த்தரால் அங்கீகரிக்கப்பட்ட மனநிலைமையை பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்களது குடும்பத்துக்கு சொத்து எதுவும் வைக்காமல் ஒரு வீட்டை மட்டும் வைத்திருந்தால் கூட தெளிந்த புத்தியுள்ள ஆவியை பெற்றிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் உக்கிராணத்துவத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். முடிவில் அப்படிப்பட்ட பிள்ளை பெற்றோரின் விசுவாசத்தை உணருவார்கள்.

நாம் பொதுவான ஜனங்களைக் காட்டிலும் இரத்த சம்பந்தமான உறவு உள்ளவர்கள் மீது அதிக அக்கறையை வெளிப்படுத்த வேண்டும். கர்த்தருடைய ஆவி நம்மை பொதுவான மனுக்குலம் மீது தயவுக்கும் கிருபைக்கும் வழிநடத்தினால், நமது மனோபாவம் நமது உறவினர்கள் மீது இன்னும் அதிகமாக இருந்து சந்தர்ப்பத்திற்குத்தக்கதாக உதவி செய்ய வேண்டும் என்பதை சுட்டி காட்டுகிறது. எனினும் நமது தீர்மானத்தின்படி, வேதவாக்கியங்களில் சொல்லப்பட்டதற்கு எதிராகவோ, நமது கர்த்தரும் நமது அப்போஸ்தலர்களும் அவர்களது நடத்தைகளின் மூலமாக நமக்கு வைத்திருக்கும் உதாரணங்களுக்கு மாறாகவும் நமது பூமிக்குரிய உறவினர்களுடன் அதிகம் ஐக்கியம் வைத்திருப்பது ஞானமாக இருக்காது. அல்லது அவர்களை விசுவாச வீட்டாரைக் காட்டிலும் அதிகமாக வரவேற்று நடத்துவது ஞானமானதாக இருக்காது.

"ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் ....அவன் விசுவாசத்தை மறுத்தலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான்" என்கிற அப்போஸ்தலரின் வார்த்தைக்கு இசைவாக நெருங்கிய உறவினர்களுக்கு ஒரு விதிவிலக்கை நாம் இங்கே செய்கிறோம். பொதுவாக இந்த விதிவிலக்குக்கு மேலாக "நமக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" என்கிற அப்போஸ்தலரின் வார்த்தைகளை பிரயோகிக்க வேண்டும். (கலாத்தியர் 6:10) நமது விசுவாச குடும்பத்தாருக்கு அடுத்தபடியாக நமது தூரத்து உறவினர்கள் வரவேண்டும்.

புது சிருஷ்டியின் நிலைப்பாட்டிலிருந்து, புது உறவு, கிறிஸ்துவின் அங்கங்கள், நமது சொந்த குடும்ப அங்கங்களாக இருப்பார்கள். அவர்களது தற்காலிக தேவைகள் ஓரளவுக்கு நமது பொறுப்பாக இருக்கும். எனினும் நமது கர்த்தர் வாழ்ந்த காலத்தில் நாம் இப்போது வாழவில்லை. தற்காலத்தில் அநேக பொதுவான தர்ம ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இந்த காரணத்தினால் தான் இந்த வார்த்தைக்கு அப்போஸ்தலர் காலத்தில் கொடுக்கப்பட்ட அழுத்தம் இப்பொழுது கொடுக்கப்படுவதில்லை. சில சமயங்கள் ஒருவர் பொதுவான சொத்திற்கு வரி செலுத்தும் போது சரியான ஏற்பாட்டை செய்வார்.

அதன் பலனில் அவரும் பங்கு பெறும் அவசியம் ஏற்படும். பிற்காலத்தில் அவரது சொந்த கணக்கிலோ அல்லது சில சொந்த நண்பர்கள் அல்லது அவரது சொந்த குடும்ப அங்கங்கள் கணக்கிலோ அனுபவிப்பார்.

மகா பரிசுத்தமான விசுவாசத்தில் ஒருவரை ஒருவர் உறுதிப்படுத்திக் கொள்ளுதல்

அவனது சொந்த குடும்பத்திற்கு இயேசுவே தலை. அவர் அவருடைய ஜனங்கள் ஒருவருக்கொருவர் தேவையில்லாமல் சுமையாக இருக்கக்கூடாது என்று நோக்கம் கொண்டவர். ஆனால் ஒவ்வொருவரும் பிறருக்கான தனது பொறுப்பை உணர்ந்து, சந்தோஷத்துடன் உதவிக்கரம் நீட்ட வேண்டும். "ஒருவருக்கொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் உறுதிப்படுத்தி" ஆசீர்வாத்ததை பெற உற்சாகப்படுத்த வேண்டும். தமது சீஷர்களை ஒரு புது குடும்பமாக இணைத்து "ஒரு விசுவாச குடும்பமாக" ஆக்க வேண்டும் என்பதே நமது கர்த்தரின் நோக்கமாகும். ஆகையால் தான் நமது பரஸ்பர ஐக்கியம், பரஸ்பர உதவி மற்றும் கிரமமான கூடுகைக்காகவும் மீண்டும் மீண்டுமாக கட்டளைகளையும் உற்சாகத்தையும் கொடுத்து, எங்கே இரண்டு பேர் அல்லது மூன்று பேர் கர்த்தரின் நாமத்தினிமித்தம் கூடும் போது அவர் அங்கே அவர்களது நடுவேயிருந்து அவர்களை ஆசீர்வதிப்பதாகவும் வாக்குத்தத்தையும் நமது கர்த்தர் கொடுத்ததையும் நாம் காண்கிறோம். அவரது ஜனங்கள் சபை கூடி வருகிறதை விட்டு விடக்கூடாது.

நமது வசனத்திற்கு வரும் போது, தனது சொந்த குடும்பத்தை கவனியாதவன் விசுவாசத்தை மறுதலிக்கிறவனாயிருக்கிறான் என்று அப்போஸ்தலர் கூறுவதை நாம் கவனிக்கிறோம். நாம் கூறுகிற விசுவாசம் என்பது சில காரியங்களில் நாம் பெறுகிற விசுவாசத்தை மாத்திரம் குறிக்காமல், உரிமைக்குரிய காரியங்கள், நமது குணலட்சணம் பொதுவாக நமது வாழ்க்கையின் காரியங்களையும் பாதிக்கிறது. மற்றவர்கள் தேவனை நேசிக்கிறதைக் காட்டிலும் நாம் அதிகமாக அவரை நேசிக்கிறோம் என்று கூறுகிறோம். நாம் நம்மை நேசிக்கிறது போல பிறனையும் நேசிக்கிறோம் என்று கூறுகிறோம். இதை நமது தர நிலையாக எடுத்துக்கொள்ளுகிறோம் என்று கூறுகிறோம். தன்னைத்தான் நேசிப்பது போல பிறனை நேசிப்பது ஒரு மனிதனுடைய பொறுப்பு என்றால் தனது குடும்பத்தை இரட்டிப்பான அளவு கவனிக்க வேண்டும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். ஒருவன் அதை கைவிட்டால், அவன் பிரசங்கிக்கிற கிறிஸ்துவின் போதனைகளை தவறாக சித்தரிப்பதாகும். போதனைகளை போதித்துக் கொண்டு அதற்கு மாறாக வாழ்ந்தால் அது தான் விசுவாசத்தை மறுதலிப்பது. வாழ்க்கையின் இந்த அங்கீகரிக்கப்பட்ட நிலைமையை மீறி ஒருவர் வாழ்ந்தால் உலகத்தாரைக் காட்டிலும் மேலாக அல்ல கீழாக வாழ்கிறவராவார்.

விசுவாசத்தை மறுதலிப்பது என்பது அன்பு இல்லாமை, இரக்கமின்மை, அக்கறையின்மை, அந்த அளவுக்கு விசுவாசம் மறுதலிக்கப்படுகிறது. பெரிய வேதனையிலும் துன்பத்திலும் மற்றவர்களைக் குறித்து இரக்கத்துடன சிந்திக்கூடிய நமது ஆண்டவரின் சுயநலமின்மையை ஒரு பரிபூரண உதாரணமாக நாம் பெற்றிருக்கிறோம்! தமது தாயைப் பற்றிய அக்கறையும் தமது அன்பான சீஷன் யோவானிடம் தமது தாயை ஒப்படைத்ததும் உயர்ந்த குணலட்ணத்தைக் குறிக்கிறது. இந்த கடைசி மணி சோதனை நேரத்தில் யோவான் தனது ஆண்டவருடன் இருந்ததும் அவரது உயர்ந்த குணத்தை காண்பிக்கிறது!